செய்தி வெளியீடு எண் : 1365 நாள் : 12.07.2023

## செய்தி வெளியீடு

### தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் சார்பில் ரூ.276.15 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள கட்டடங்களை திறந்து வைத்து, ரூ.56.31 கோடி மதிப்பீட்டிலான மனை மேம்பாட்டுத் திட்டத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் இன்று (12.7.2023) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் சார்பில் 276 கோடியே 15 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள அடுக்குமாடி குடியிருப்புகள், வணிக வளாகக் கட்டடங்கள், வாரிய பிரிவு அலுவலகக் கட்டடம், சமுதாயக்கூடம் ஆகியவற்றை திறந்து வைத்து, 56 கோடியே 31 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஏற்படுத்தப்பட்ட மனை மேம்பாட்டுத் திட்டத்தை தொடங்கி வைத்தார்.

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், சமூகத்திலுள்ள அனைத்து வருவாய்ப் பிரிவினர் மற்றும் அரசு ஊழியர்களுக்கு வீட்டுவசதி ஏற்படுத்தி தருவதை தலையாய நோக்கமாக கொண்டு செயல்பட்டு வருகிறது. இவ்வாரியம் சுற்றுச்சூழலுக்கு உகந்த மற்றும் நிலையான வீட்டுவசதி தீர்வுகளை வழங்கி வருகிறது. மேலும், தற்போது இவ்வாரியம் உயரமான கட்டடங்கள், வணிக மற்றும் அலுவலகக் கட்டடங்கள், மறுகட்டுமானத் திட்டங்களையும் மேற்கொண்டு வருகிறது.

அந்த வகையில், கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் தெற்கு வட்டம், சௌரிபாளையத்தில் 8 கோடியே 9 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய பிரிவு அலுவலகக் கட்டடம்;

தமிழ்நாடு அரசு அலுவலர் வாடகைக் குடியிருப்புத் திட்டத்தின் கீழ், விருதுநகர் மாவட்டம், விருதுநகர் வட்டம், கூரைகுண்டு கிராமத்தில், 60 கோடியே 37 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 222 அடுக்குமாடிக் குடியிருப்புகள்; நீலகிரி மாவட்டம், கூடலூர் வட்டம், கூடலூர் கிராமத்தில் 10 கோடியே 19 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 30 குடியிருப்புகள்; தேனி மாவட்டம், பெரியகுளம் வட்டம், வடவீரநாயகன்பட்டி கிராமத்தில் 35 கோடியே 31 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 122 அடுக்குமாடி குடியிருப்புகள்;

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் சார்பில் சென்னை மாவட்டம், அமைந்தகரை வட்டம், முள்ளம் கிராமத்தில் 17 கோடியே 28 இலட்சம் ரூபாய் செலவிலும், மயிலாப்பூரில் 7 கோடியே 97 இலட்சம் ரூபாய் செலவிலும், திருவான்மியூரில் 8 கோடியே 12 இலட்சம் ரூபாய் செலவிலும், கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் வடக்கு வட்டம், கணபதி கிராமத்தில் 10 கோடியே 71 இலட்சம் ரூபாய் செலவிலும் கட்டப்பட்டுள்ள வணிக வளாகக் கட்டடங்கள் மற்றும் சென்னை மாவட்டம், மாதவரம் வட்டம், மாத்தூர் கிராமத்தில் 9 கோடியே 85 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள சமுதாயக்கூடம்;

சென்னை மாவட்டம், திருவான்மியூரில் 6 கோடியே 21 இலட்சம் ரூபாய் செலவில், தூண்தளம் மற்றும் 5 தளங்களைக் கொண்ட 10 உயர் வருவாய் பிரிவு அடுக்குமாடி குடியிருப்புகள்;

கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் வடக்கு வட்டம், கணபதியில் 22 கோடியே 37 இலட்சம் ரூபாய் செலவில் 48 உயர் வருவாய் பிரிவு அடுக்குமாடிக் குடியிருப்புகள், 26 கோடியே 25 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 56 உயர் வருவாய் பிரிவு அடுக்குமாடிக் குடியிருப்புகள் மற்றும் 27 கோடியே 86 இலட்சம் ரூபாய் செலவில் 60 உயர் வருவாய் பிரிவு குடியிருப்புகள்; கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் வட்டம், நல்லூர் கிராமத்தில் 25 கோடியே 57 இலட்சம் ரூபாய் செலவில் 70 அடுக்குமாடிக் குடியிருப்புகள்;

என மொத்தம் 276 கோடியே 15 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள அடுக்குமாடி குடியிருப்புகள், வணிக வளாகக் கட்டடங்கள், வாரிய பிரிவு அலுவலகக் கட்டடம், சமுதாயக்கூடம் ஆகியவற்றை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்றைய தினம் திறந்து வைத்தார்.

மேலும், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் மனை மேம்பாட்டு திட்டத்தின் கீழ், புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை வட்டம், முள்ளூர் கிராமத்தில் 56 கோடியே 31 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 100 ஏக்கர் நிலப்பரப்பில் ஏற்படுத்தப்பட்டுள்ள 1603 மனைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் திரு. எஸ். இரகுபதி, மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. சு. முத்துசாமி, மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு. தா.மோ. அன்பரசன், தலைமைச் செயலாளர் திரு. சிவ்தாஸ் மீனா, இ.ஆ.ப., வீட்டுவசதி மற்றும்

நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர் செல்வி அபூர்வா, இ.ஆ.ப., தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் தலைவர் திரு. பூச்சி எஸ். முருகன், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் திரு. எ. சரவணவேல்ராஜ், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

............

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in